# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

11வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

☎ 416-282-8059
📠 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 | JUNE 01, 2001 | பாலம் 11



❊ பெற்றோர் பிள்ளைகளில் தங்கியிருப்பது தவறா? (பக். 8)
❊ நல்விடயங்களை சல்லடை போட்டு முன்னேறுபவர்கள்... (பக். 12)
❊ யோகாசனத்தில் சந்தேகமா? (பக். 13)
❊ ஸ்காபுரோ றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சியிலே... (பக்.6)
❊ அகத்தின் அழகை முகத்தில் காணும்.... Dr. மூர்த்தி (பக். 5)
❊ தாவரங்களில் மாற்றும் பெட்ரோலியத்தில்...... (பக். 2)
❊ வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறுபவர்கள் (பக். 4)
❊ ரொரன்ரோ தமிழ்ப் பெற்றோர் கவனத்திற்கு (பக்.15)
❊ முதல் தடவையாக வீடு வாங்குபவர்களுக்குரிய சலுகைகள் (பக். 17)





RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

**Raja M. Mahendran, P.Eng.**
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
Office: (416) 491-4002
Pager (416) 589-4270
MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## உலக நாடுகள் வரிசையில்
### ஓமான் (OMAN)

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள எண்ணெய் வளம் கொழிக்கும் செல்வந்த நாடுகளில் ஓமானும் ஒன்றாகும். 17ஆம் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் இந்நாடு போர்த்துக்கீசர் பின்னர் பிரிட்டிஷ் நாட்டவர்களின் காலனித்துவ ஆட்சிக்குள் இருந்தது.

**நாட்டின் பெயர்:-** சுல்ரானேற் ஒல் ஓமான் (SULTANATE OF OMAN)

**மொத்த நிலப்பரப்பு:** 82,000 ச.மைல்

**மக்கள் சனத்தொகை:** 2.5 மில்லியன் பேர் (1999 ஆண்டு புள்ளி விபரப்படி)

**தலைநகரம்:** "மஸ்கற்" (MUSCAT )

**மொழி:** அராபிக்(உத்தியோக மொழி ), ஆங்கிலம், பார்ஸி, (FARSI) பாலுசி (BALUCHI), உருது (பரவலாக ஆங்கிலம் உபயோகிக்கப்படும்)

**மதம்:** ஜபாடி முஸ்லீம் - 75% (JBADI MUSLIM)மற்றும் Sunny Muslim, Shiite Muslim என்னும் முஸ்லீம் இனத்தவரில் வேறுபட்டவர்கள் தவிர இந்துக்களும் வசிக்கின்றனர்.


(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

1968 இல் தொடங்கிய சர்ச்சை, இன்னும் தொடர்கின்றது. நாளையும் தொடரும்... உண்மை எதுவாக இருந்தாலும் இது இப்படியாக இருக்கும், இதுதான் இன்றைய கேள்வி. மனிதன் உண்மையில் சந்திரனிற்கு சென்றிருக்கிறானா? அல்லது எல்லோரையும் முட்டாள்களாக்கத் திட்டமிட்ட நாடகமா? பல அறிஞர்களின் கூற்றுப்படி சந்திரனிற்கு மனிதன் செல்வதற்கு சாத்தியக்கூறு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்பதாகும். உண்மையில் நீல் ஆம்ஸ்ரோங் சந்திரமண்ணில் கால் வைக்கவில்லை என்றால், எதற்காக இப்படிச் செய்திருக்க வேண்டும்?

அமெரிக்காவைவிட விஞ்ஞானத்தில் முன்னணியில் நின்ற அன்றைய 'ரஸ்யா' ஆல் ஏன், மனிதரை சந்திரனிற்கு அனுப்பமுடியவில்லை?

கேள்விகள் தொடர்கின்றன...
ஆறாவது அறிவைக் கொண்ட மனிதனென்றாலும், ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டும். கேள்விகளை எங்களையே கேட்க வேண்டும். மற்றவர்கள் கூறுவதையும் சரியோ தவறோ என ஆராய்ந்து முடிவு எடுப்பது எல்லோரிற்கும் நல்லது. சிறந்த முடிவுகளிற்கு சிறந்த கேள்விகள் தேவை? நல்லதையே சிந்திப்போம், நல்லதையே செய்யவேண்டும்.

-நெற்றிக்கண்ணன்


இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA
& Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9

☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona


எண்ணங்கள் விருந்தினர்களைப் போல வரவேற்கப்பட வேண்டும், விருப்பங்கள் குழந்தைகளைப் போல வரவேற்கப்படவேண்டும்.
- சீனப் பழமொழி


Singapore Communication

FREE PAGER | $35.00

-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life
LIBERTY MUTUAL

✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (81)



-விஜே குலத்துங்கம்

நீங்கள் ஒரு ரோஜா பூச் செண்டை எடுத்தால் நுனியில் ஒரு பூவும் அதன் கீழ் பல இலைகளும் இருக்கும். அதிகமான பூ மரங்களில் இதே நிலை தான். ஆனால் அந்த இலைகள் எல்லாமே வர்ணங்கள் உடையதாக பூவைப் போலவே இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும். தாயகத்தில் குரோட்டன் செடியில் இலைகள் பல நிறங்களில் அழகாக இருக்கும். ஆனால் அவை இலைகள் தான். ஆனால் சாதாரண பூமரங்களில் இலைகளைப் பூக்களாக மாற்றும் வல்லமை இப்போது தாவரவியல் விஞ்ஞானிகளால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

தாவரங்களில் உள்ள மரபணு (gene) களைப் பற்றிய வெவ்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்த போது San Diego இலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தாவரவியல் விஞ்ஞானிகள் எப்படி இலைகளை பூ இதழ்களாக மாற்றலாம் என கண்டுபிடித்துள்ளார்கள். இந்தக் கண்டுபிடிப்பு ஈயத்தை எப்படி தங்கமாக மாற்றலாம் என்ற கண்டுபிடிப்பிற்கு நிகரான தாவரவியல் கண்டுபிடிப்பு எனக் கருதப்படுகின்றது.



இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி பார்ப்பதற்கு முன்னர் ஒரு பூவின் கட்டமைப்பைப் பற்றி சற்றுப் பார்ப்போம். சாதாரண பூவின் கட்டமைப்பில் நான்கு வட்டங்களில் இதன் பாகங்கள் அமைந்திருக்கும். வெளியில் உள்ள வட்டம் ஆங்கிலத்தில் Sepals எனப்படும். தமிழில் புல்லி எனப்படும். இந்தப் புல்லி என்பது பச்சை நிறத்தில் பூவிதழ்கள் போல், பூவிதழ்களைச் சுற்றி ஒரு வட்டமாக இருக்கும். பூ விரிய முன்னர் மொட்டாக இருக்கும் போது அதைச் சுற்றி புல்லிகள் மூடிப் பாதுகாக்கும். இந்த புல்லி வட்டத்திற்கு அடுத்தபடியாக இருப்பது அழகான நிறங்களில் உள்ள அல்லிகள் அல்லது பூவிதழ்கள் ஆகும். ஆங்கிலத்தில் இதை Petals என்பார்கள். இதற்கு அடுத்ததாக உள்புறமாக இருப்பது ஆண் இனப் பெருக்கப் பாகமான மகரந்தம் அல்லது Stamens என்று சொல்லப்படும். நான்காவதாக சரியாக நடுவில் இருப்பது பெண் பாகமான சூலகமும், குறியும் ஆகும். இதை ஆங்கிலத்தில் Carpel அல்லது Pistils என்று கூறுவார்கள்.

200 வருடங்களுக்கு முன்பாக மரபணு என்பது அறியப்படுவதற்கு முன்னர் இலைகள் தான் உருமாறி பூவின் மேற்குறிப்பிட்ட நான்கு பாகங்களை அல்லது வட்டங்களை உருவாக்குகின்றது எனக் கூறப்பட்டது. எப்படி இருந்தும் அணமைக் காலம் வரை ஒருவராலும் சாதாரண இலைகளை பூக்களாக மாற்ற முடியவில்லை. அண்மையில் கலிபோர்ணிய சர்வகலாசாலையைச் சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் SEP எனப்படும் ஒரேமாதிரியான மூன்று பூத்தலுக்கு காரணமான மரபணு களை கண்டறிந்தார்கள். இந்த மரபணுகளை விகாரப்படுத்தலின் மூலம் மாற்றியமைத்த போது இவை இதழ்கள், மகரந்தம், சூலகம் ஆகிய எல்லாப் பாகங்களையும் புல்லிகள் போன்று அதாவது பூவைப் பாதுகாக்கும் பச்சை நிற வெளி வட்டமாக மாற்றிவிட்டது. இந்த தாவரங்கள் தொடர்ந்து பதி வைத்தல் முறை மூலம் இனப் பெருக்கம் செய்யப்பட்டபோது தொடர்ந்து உருவாகிய தாவரங்களின் பூக்கள் இலைகள் போன்றே காட்சியளித்தன.

இந்தப் பரிசோதனையைத் தொடர்ந்து இப்போது செய்யப்பட்ட பரிசோதனையில் இதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தாவரவியல் விஞ்ஞானிகள் Arabidopsis எனப்படும் கடுகுத் தாவரத்தில் SEP மரபணுகள் மூன்றில், இரண்டையும் பூவிருத்தியில் ஈடுபடும் வேறு மூன்று மரபணுக்களையும் சேர்த்து தாவரத்தில் புகுத்திய போது இலைகளை எல்லாம் பூக்களாக மாற்றக் கூடியதாக இருந்ததை கண்டுள்ளார்கள். இந்த மேலதிக மூன்று மரபணுகள் தான் இதழ்கள், மகரந்தம் சூலகம் போன்றவற்றை உருவாக்கக் காரணமாயுள்ளன. இப்படியாக இலைகளும் பூக்கள் போன்று தோற்றமளிக்கும் படங்களையும் கலிபோர்ணியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

இவ்வகையான தாவரங்களை உருவாக்க விஞ்ஞானிகள் மிகவும் சிரமப்பட்டனர். ஒரேடியாக 5 மரபணுக்களையும் ஒரு தாவரத்தினுள் புகுத்துவது சிரமம். எனவே ஒவ்வொரு சந்ததிகளாக ஒவ்வொரு மரபணு வையும் புகுத்தவேண்டியிருந்தால் பல வருடங்கள் எடுத்தன. எனவே இப்படியாக உருவாக்கப்பட்ட இலையில்லாத தனிப் பூமரங்கள் விரைவில் பெருமளவில் உற்பத்தியாக்கப்படலாம்.

தாவரவியலில் இன்னுமொரு அரிய கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. பிளாஸ்திக் ஆனது எமது அன்றான பாவனையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பலவிதமான பாத்திரங்கள், கொள்கலன்கள் இயந்திர பாகங்கள் போன்றவை பிளாஸ்திக்கினால் செய்யப்படுகின்றன. இவை அதிகமாக பெட்ரோலியம் பொருட்களை அடிப்படையாக வைத்துதான் செய்யப்படுகின்றன. இப்போது தாவரங்களும் பிளாஸ்திக்கை உருவாக்க முடியும் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தாவரங்கள் வெவ்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு பதார்த்தங்களை உருவாக்குகின்றன. தாவரங்களின் தண்டு இலை போன்றவற்றில் தண்ணீர் வழுக்கச் செல்லும் வகையிலான ஒரு மெழுகு போன்ற பூச்சை சில தாவரங்கள் கொண்டுள்ளன. வளைத்தாலும் முறியாது இறப்பர் போன்று வளைந்து கொடுக்கக் கூடியதாகவுள்ளது. சில தாவரங்கள் தனது விதைகளை பாதுகாக்க தடிப்பான ஓட்டினைக் கொண்ட கலசங்களை உருவாக்குகின்றது.

இப்போது தாவரவியல் விஞ்ஞானிகள், தாவரங்களின் கலங்களில் சில இரசாயனப் பொருட்களை தயாரித்து சேகரித்து வைப்பதற்கான மரபணு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். Purdue சர்வகலாசாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் Dupont ஐச் சேர்ந்த விஞ்ஞானிகளும் பரிசோதனைக் கூடத் தாவரமான Arabadopsis என்ற தாவரத்தில் இருந்து இப்படிப்பட்ட மரபணு ஒன்றை Cloning மூலம் உருவாக்கியுள்ளார்கள். இந்த மரபணு தாவரங்கள் பழுதடையாமல் அந்த பாகங்களில் Plastic ஐ ஒத்த சேர்வைகளை சேகரிக்கக் கூடியதாகவுள்ளது.

இப்போது பெற்றோலியத்திலுள்ள சேர்வைகளின் சங்கிலிக் கோர்வைகளில் இருந்தே Plastic தயாரிக்கப்படும். இந்த இரசாயன மூலக் கூறுகளின் சங்கிலக் கோர்வைகள் அல்லது Chain of Compounds ஆனது Polymers பொலிமெர் என்று அழைக்கப்படும். இந்த Polymers இன் தனி மூலக் கூறுகள் Monomers எனப்படும். பெற்றோலியம் பொருட்களில் மிகச் சில Monomers க[illegible] காணப்படும். இதனால் தான் இது வரை பலவகையான Plastic பொருட்க[illegible] உருவாக்க முடியலில்லை. ஆனால் புதிய முறையில் தாவரங்கள் பல வகையான Monomer ஐ உருவாக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் புதிய வகை பிளாஸ்திக்குகளையும் தயாரிக்கக் கூடியச் சாத்தியக் கூறுகள் உள்ளன.

தாவரங்களை விட நுண்ணுயிர்களில் இருந்தும் பிளாஸ்திக் தயாரிக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. வயிற்றோட்டத்தை உண்டாக்கும் E-Coli பக்ரீரியா பிளாஸ்திக் உற்பத்தியை செய்யக் கூடியதாகவிருக்கின்றது. ஆனால் தாவரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் போது செலவு குறைவாக இருக்கும். பெற்ரோலியத்தில் இருந்து எடுக்கப்படும் பிளாஸ்திக்கை தாவரங்களில் உருவாக்க முடியுமென்றால் பெற்றோலியத்தையே தாவரங்களால் உண்டாக்கக் கூடிய நிலையும் இந்த புதிய Genetic Engineering முறை மூலம் கூடிய சீக்கிரத்தில் சாத்தியமாகும் என நம்பலாம்.

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408

குறுக்கு எழுத்துப் போட்டி இல. 119

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | ■ | 5 | |
| | ■ | | ■ | 6 | | | |
| 7 | | | ■ | | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | ■ | | 8 | | 9 |
| 10 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | ■ | 11 | ■ | ■ | |
| 12 | | | | | | | |

**இடமிருந்து - வலம்**

1. சொற்பொழிவு
5. சேர்
6. வீட்டின் முற்பகுதி
7. தலை
9. அன்பு (வல - இட)
10. செய்தி
12. கழுவாய்

**மேலிருந்து - கீழ்**

1. ஒளிவிடு
2. உதவி
3. ஆறு கடலுடன் கலக்கும் இடம்
4. வலிமை
5. பிழி
8. எப்பொழுதும்
9. காற்றாடி
11. தங்கு
12. பிறகு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JUNE 28, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ற் | று | ப் | பு | ற | ம் | ■ |
| ற் | ■ | ண | ■ | ட் | ■ | ■ | சூ |
| ற | ■ | கி | ட் | டி | ப் | பு | ள் |
| த் | ■ | ■ | ■ | ■ | ■ | கை | ■ |
| தா | வ | டி | ■ | ம் | ர | யி | வ |
| ர் | ■ | ண் | ■ | ■ | | லை | ■ |
| ■ | வ | ர | கு | ■ | பு | ■ | கோ |
| பு | லி | க | ளி | ன் | கு | ர | ல் |

**117இல் வெற்றி பெற்றோர்**

1) N. Leela Scarborough, Ont.
2) K. Nithiya Scarborough, Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*



**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- **ECE** தகுதி பெற்ற நடத்துனர்
- **TAX RECEIPT** வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

தினசரி நடவடிக்கைகள்:-

* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033

தொடர்புகளுக்கு: **Mrs. S. J.** செளந்தரநாயகம்

**151 Lamareaux Dr., TownHouse 99A (Finch/Birchmount)**

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

## துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு


மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு

அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591






3434 Lawrance Ave. Markham

Hot: (416) 703-8064 Voice: (416) 289-3154

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(52)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துவோர், செலுத்த விரும்புவோரின் ஆரம்ப முயற்சிகள், வீதிப் பரீட்சைகள், வீதி ஒழுங்குச் சட்டங்கள், இச் சட்டங்களை மீறித் தண்டனை ரிக்கற் பெறுவோர் தம்முடைய குற்றச் சாட்டினை தாமாகவே நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று இக் குற்றச் சாட்டிலிருந்து தப்பிக் கொள்வது தொடக்கம் அப்பீல் செய்வது வரை பார்த்ததுடன் வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளின் பொதுவான சில குற்றச் சாட்டுகள் பற்றிக் கடந்த அத்தியாயங்களில் தொடர்ச்சியாக ஒவ்வொன்றாக பார்த்தோம்.

இம்முறை வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் அடுத்த இரு குற்றச் சாட்டுகளுக்கு செல்வோம்.

## 1) பாதுகாப்பு, அவதானம் இல்லாத திருப்பங்களும் ஒழுங்கை மாறுதல்களும் (UNSAFE TURNS AND LANE CHANGES)

வீதி ஒழுங்குச் சட்டத்தின் 142(1) ஆம் பிரிவு பின்வருமாறு ஆங்கிலத்தில் இக்குற்றச் சாட்டினை வரையறை செய்கின்றது.

The driver or operator of a vehicle upon a highway before turning to the left or right at any intersection or into a private road or drive way or from one lane for traffic to another lane for traffic or to leave the road way shall first see the movement can be made in safety and if the operation of any other vehicle may be affected by the movement shall give a signal plainly visible to the driver of other vehicle of the intention to make the movement

அதாவது சுருக்கமாக குறிப்பிடப் போனால் இடது பக்கம் வலது பக்கம் திருப்புவர் அல்லது ஒழுங்கை மாறுபவர் ஏனையோருக்கு எதுவித இடையூறும் இல்லாது அவதானமாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படும் விடயமாகும்.

இத்தகைய குற்றச் சாட்டுகளில் பிடிபட்டு கொள்வோர் பின்வரும் வகையில் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

* $60 டொலரில் இருந்த $500 டொலர் வரை பணத் தண்டனை
* இரண்டு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்.

## 2) ஒரு வாகனத்திற்கு மிக அருகில் பின் தொடர்வது (FOLLOWING TOO CLOSELY)

ஒரு வாகனத்திற்கு நெருக்கமாக ஒருவர் இடைவெளி எதுவும் இல்லாமல் பின் தொடர்வது என்பது பல சந்தர்ப்பங்களிலும் விபத்துக்களை உருவாக்குவதால் வீதி ஒழுங்குச் சட்டதின் 158(1) பிரிவு இதனை பின்வருமாறு ஆங்கிலத்தில் வரையறை செய்கின்றது.

The driver of a motor vehicle shall not follow another vehicle more closely than is reasonable and prudent having due regard for the speed of such vehicle and the traffic and the condition of the highway

அதாவது ஒரு வாகனத்திற்கு பின் தொடரும் வாகனம் கணிசமான இடைவெளி என்பதனை பேணிக் கொண்டே பின் தொடர வேண்டும் என்பதும் அதனை மீறுவோர் தண்டிக்கப்படுவார்கள் என்பதும் இங்கு முக்கியமானது ஆகும்.

இத் தவறினை மேற்கொள்வோர் பின்வரும் தண்டனைக்கு உரியவர்கள் ஆவார்கள்


* $60 டொலரில் இருந்து $500 டொலர் வரையிலான பணத் தண்டனை
* நான்கு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

பொதுவாக மாகாண சாரதிப் பயிற்சித் திட்டத்தில் இவ் இடைவெளி என்பது நேரத்தினை அலகாக (TIME FACTOR) கொண்டே வரையறை செய்யப்படுகின்றது. அதாவத முன்னால் செல்லும் வாகனம் போய்க் கொண்டிருக்கும் இடத்திற்கு பின் தொடரும் வாகனம் போய் சேர இரண்டு செக்கன்கள் எடுக்கும் அளவுக்கு இடைவெளி இருத்தல் வேண்டும் என்பதே குறிப்பிடப்படுள்ளது.

(ஏனெனில் வேகங்கள் என்பது முன்னுக்கு பின்னால் தொடரும் வாகனங்கள் வித்தியாசமான நிலையில் செலுத்தி கொண்டிருப்பதால் நேரத்தினை அலகாக கொண்டே பாடத்திட்டங்களில் வரையறை செய்யப்பட்டுள்ளது)

ஆனால் எங்கள் அனுபவங்களில் இவ் இடைவெளி என்பதனை நான்கு செக்கன்கள் என்ற நேர அலகில் பின் தொடர்வது என்பது மிகவும் பாதுகாப்பாக இருக்கும் ஏ்னபது அனுபவங்களில் கண்ட உண்மையாகும்.

(இங்கு பின் தொடர்பவர் முன்னால் செல்லும் வாகனத்திற்கு பின்பக்கமாக மோதினால் எந்த ஒரு சாட்டும் சொல்லித் தப்பமுடியாது. பின்னால் மோதியவரே இடைவெளி விட்டு தொடர வேண்டும் என்பது சட்டத்தில் வலியுறுத்தும் முக்கிய விடயமாகும்)

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS

உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

யோகா சோதிடம்

★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்
☎: (416) 299-8361

அடுத்த அத்தியாயத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டவர் அல்லது வாகனம் செலுத்த தடை செய்யப்பட்டவா அதனை மீறினால் எத்தகைய விளைவுகளை எதிர் கொள்ள வேண்டி வரும் என்பதனை ஆய்வு செய்வோம்.


தொடரும்....

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
(Professional Licensed Instructor In Car & Class Room)

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 13

*-Dr. N. S. Moorthy Ph.D*



## முகப் பரிசோதனை (Facial Diagnosis)

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று சொன்னார்கள் நம் முன்னோர்.. ஒருவரது உடல் நிலையையும் மனோ நிலையையும் ஒரே நேரத்தில் கண்ணாடி போல் காட்டக் கூடியது முகம் ஆகும். அதே முகத்தைக் கண்ணாடியில் பார்த்தால் தெரியும் ரேகைகளும் மடிப்புகளும் பல விடயங்களை எமக்குக் கூறும். நெற்றியில் குறுக்காகக் காணப்படும் மடிப்புகள் அடி மனதில் காணப்படும் கவலைகளைத் தெரிவிக்கின்றன. புருவங்களுக்கு மத்தியில் வலப் புறமாக நேர்கோடாகக் நிலைக் குத்தாகக் காணப்படும். ரேகை மனக்குமுறல்களை ஈரலில் தேக்கி வைத்திருப்பதையும் இடப்புறமாகக் காணப்படுவது உணர்ச்சிகளை மண்ணீரலில் தேக்கி வைத்திருப்பதையும் தெரிவிக்கின்றது.

கண்ணிமையின் கீழ்ப்புறம் வீங்கியும் நிரம்பியும் க்ாணப்படுவது சிறுநீரகங்களின் தொழிற்பாட்டில் உள்ள குறைபாட்டை அறியத்தருகின்றது. கண்களின் கீழாக மூக்கின் இரு புறங்களிலும் வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளையொத்த விதத்தில் நிறமாற்றம் காணப்படுவது உடல் இரும்புச் சத்தையோ (Iron) அல்லது போலிக் அமிலத்தையோ (Folic Acidd) உறுஞ்சத் தவறுகின்றது என்பதுடன் சமிபாட்டு உறுப்புகளில் உள்ள குறைபாட்டையும் அறிவிக்கின்றது. உணவை சக்தியாக மாற்றம் செய்வதிலுள்ள மந்த நிலையும் இதன் மூலம் தெளிவாகின்றது.



கோவைப் பழத்தையும் மாதுளையையும் உவமானமாகக் கூறப்படும் உதடுகளும் நமக்குப் பல கதைகளைக் கூறுகின்றன. உதடுகளின் அளவு அமைப்பு மேற்பரப்பு நிறம், தன்மை ஆகின உள்ளுறுப்பக்களின் நிலைகளையும் மனநிலையையும் உணர்த்துகின்றன.

காய்ந்து இறுகிப்போன உதடுகள் உடலுள் நீர்த்தன்மைக் குறைபாட்டையும் நரம்பு மண்டலச் சமநிலைகுலைவையும் தெரியப்படுத்துகின்றன. பயம், பதற்றம் ஆகியனவும் உதடுகளைக் காயவைப்பதுடன் நடுங்கவும் வைக்கின்றது. உடலில் இரத்தத்தின் தன்மை குறைவடைந்தால் சோகை (Anaemia) ஏற்படுகின்றது. உதடுகள் வெளிறியிருப்பதைக் கொண்டே இதைக் கூறிவிடமுடியும். அதிக எண்ணிக்கையிலும் நீண்டகாலமாகவும் ஒருவர் புகைப்பிடிப்பதை கறுத்த இருண்ட உதடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.


உதடுகளின் ஓரங்களில் சிறு சிறு கொப்புளங்கள் அடிக்கடி ஏற்படுவது வைரஸ் கிருமிகளின் தாக்கத்தைப் பிரதிபிக்கின்றது. அதிகளவில் வெளிறிய மண்ணிறப்புள்ளிகள் உதடுகளில் காணப்பட்டால் அது சமிபாட்டுக் குறைபாட்டையும் குடற்புழுக்களின் தாக்கத்தையும் தெரிவிக்கின்றன. மஞ்சள் காமாலை (Jaundice) நோயில் உதடுகள் மஞ்சள் நிறமாகக் காட்சி தரும். இருதய நோயுள்ளவர்களிலும் பிராணவாயுக் குறைபாட்டின் காரணமாக உதடுகள் நீல நிறத்தில் காணப்படும் உதடுகளின் ஒவ்வோர் பகுதியிலும் காணப்படும் நிறமாற்றங்கள் ஒவ்வோர் உள்ளுறுப்புக்களின் குறைபாடுகளைத் தெரிவிக்கின்றன. மேல் உதட்டின் நடு மேல் பகுதி தைராயிட் சுரப்பு (Thyroid) குறைபாட்டையும் அதன் கீழுள்ள பகுதி இருதயத்தின் (Heart) நிலையையும் அதன் கீழாகவுள்ள பகுதி இரப்பையை (Stomach) ஐ பற்றியும் அதன் வலப்புறத்தில் ஈரலும் (Liver) இடப்புறத்தில் மண்ணீரலும் (Spleen) தத்தமது நிலைகளைத் தெரிவாக்குகின்றது.

கீழுதடும், மேலுதடும் சந்திக்கும் இடத்தின் இரு ஓரங்களும் இரு சிறுநீரகங்களின் தன்மைகளை (Kidneys) தெரிவிப்பதுடன் கீழுதட்டின் பெரும்பகுதி சிறுகுடல், பெருங்குடல் (Intestine) ஆகியவற்றின் நிலைகளை அறியத்தருகின்றன. வாதப்பிரகிருதிகள் உலர்ந்த மெல்லிய உதடுகளையும் பித்தப் பிரகிருதிகள். நன்கு சிவந்த உதடுகளையும் கபப் பிரகிருதிகள் தடித்து எண்ணைத் தன்மையான உதடுகளையும் கொண்டிருப்பார்கள். உணவை உண்பதற்கும் முத்தமிடுவதற்கும் சத்தமிடுவதற்கும் மட்டும் பயனுள்ளதெனக் கருதப்படும் உதடுகள் நம்மைப்பற்றிய சரித்திரத்தையே சொல்லக் கூடியன என்பதை பண்டைய தமிழ் மருத்துவம் எவ்வளவோ அழகாகச் சொல்லியுள்ளது.

அடுத்து வருவது நகங்கள் ஆகும். நம்முன்னோர்கள் Scan & X-Ray போன்ற நவீன கருவிகள் எதுவுமின்றி பல நோய் நிலைகளை அறிவதற்கு நாடிப்பரிசோதனையுடன் மேற் கூறிய உடலுறுப்பக்களின் தன்மைகளைக் கொண்டே நோய்களை அறியும் முறைகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். இவற்றுள் ஒன்றாக நகப்பரிசோதனையும் அடங்குகிறது.


(Nail Diagnosis) பண்டைய தமிழ் மருத்துவ அறிவியலின் படி நகம் எனப்படுவது எலும்புகளின் கழிவுப்பொருளாகக் கூறப்பட்டுள்ளது. நகங்களின் அளவு, அமைப்பு, மேற்பரப்பு, தன்மை ஆகியவற்றுடன் அவை வளையும் தன்மை, மென்மை, உறுதி, அல்லது உடையும் தன்மை ஆகியவையும் கவனத்தில் கொள்ளபட வேண்டியவை. காய்ந்த இறுக்கமான இலகுவில் உடையக் கூடிய நகங்கள் வாதப்பிரகிருதியையும் மென்மையான இளஞ்சிகப்புடன் கூடிய பளபளப்பான வளையக்கூடிய நகங்கள் பித்தப்பிரகிருதித் தன்மையையும் தடித்த உறுதியான ஒழுங்கான அமைப்புடன் கூடிய நகங்கள் கபப் பிரகிருதியையும் பிரதிபலிக்கின்றது.

நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை
உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
Also Air Conditioning Service & Repair
NTE AUTO INC.
New Trade Engineering
என். ரி. இ. ஓட்டோ இங்க்
Contact: Sivabalan சிவபாலன்
Tel: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough

GB TRANSPORT



உங்கள் வீட்டு, வணிக, அலுவலகம் சம்பந்தமான சகல பொருட்களை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் இடமாற்றம் செய்வதற்கு அழையுங்கள்.
HOME - 416 335 1910
CELL - 416 459 9268

இன்றைய நவீன மருத்துவ முறையிலும் கூட அகன்று வளைந்து நகங்கள் (Clubbing) இருதய அல்லது நுரையீரல் தொடர்பான நோய்களைப் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகின்றது. மேலிருந்து கீழாக கோடுகள் நகங்களில் காணப்படுதல் சமிபாட்டில் உறுஞ்சப்படும் தன்மை குறைந்து காணப்படுவதையும் குறுக்காக கோடுகள் காணப்படுதல் ஊட்டச்சத்துக்களின் குறைவையும் நீண்டநாள் நோய் நிலைகளையும் தெரிவிக்கின்றன. கரண்டி போன்ற உள்வளைந்த நகங்கள் இரும்புச்சத்துக் குறைவின் அடையாளமாகும். நகங்களில் புள்ளிகள் காணப்படுவது சிங்க் (Zinc) அல்லது கல்சியம் (Calcium) குறைந்துள்ளதைக் காட்டுகிறது. வெளிறிய நகங்கள் ஈரல் நோய் அல்லது காமாலை நோயையும் நீல நிற நகங்கள் இருதய பலவீனத்தையும் எமக்குத் தெரிவிக்கின்றது.

கையிலுள்ள ஒவ்வொரு விரல்களும்கூட ஒவ்வொரு உள்ளுறுப்புகளுடன் தொடர்பாக உள்ளன. பெருவிரல் நகம் மூளையுடனும் மண்டை ஓட்டுடனும் தொடர்பாயுள்ளது. இதே போன்று சுட்டுவிரல் சுவாசாசயங்களுடன் நடுவிரல் சிறுகுடலுடனும் மோதிரவிரல் எனப்படும் நான்காவது விரல் சிறுநீரங்களுடனும் சின்னவிரல் இருதயத்துடனும் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது. இதிலொரு முக்கிய விடயமென்னவெனில் இப்போதைய நவீன மருத்துவ முறையில் கூட இருதய நோய் உள்ளவர்களுக்கு ஏற்படும் நெஞ்சு வலியின் போது (Angina Pectoris) இடப்புறத் தோள் புறமாக கைக்கு வந்து சின்னவிரலில் முடியும் எனக் கூறப்படுகிறது. ஆனால் அதற்கான முழுவிளக்கமும் இன்னும் கூறப்படவில்லை. இதனை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விளக்கிய தமிழ் மருத்துவத்தை நாம் என்னென்பது.

தொடரும்....

# விளையாட்டுத் தகவல்கள் (77)


-எஸ். கணேஷ்



## ஸ்காபுரோ றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்
## SCARBOROUGH RANGERS SOCCER CLUB

### உதைபந்தாட்டம்

கடந்த சில வருடங்களாக எமது தமிழர் சமூகத்தின் மத்தியில் மிகவும் பிரபல்லியம் அடைந்து வரும் ஒரு உதைபந்தாட்ட கழகம் ஸ்காபுரோ **Rangers** விளையாட்டுக் கழகமாகும். ரொறன்ரோவில் கனேடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கத்தின் போட்டிகளிலும், **Toronto District League** ஆட்டங்களிலும் கலந்து கொண்டு இக் கழகம் பல வெற்றிகளை பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதற்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் எமது இளம் சிறார்களை கருத்தில் கொண்டு இவர்களுக்கோ ஒரு தனியாக விளையாட்டு பயிற்சி வகுப்புகளை நடாத்துவதற்கு இக் கழகம் சில ஆண்டுகளுக்கு முன்பு முடிவெடுத்துள்ளது.



இதன் பிரதான காரணகர்த்தாவாக திரு. அன்ரன் சந்திரசேகரா அவர்கள் பல சிரமத்தின் மத்தியிலும் இம் முயற்சியை தொடங்கிறார். இலங்கையில் பொலிஸ் அதிபராகவும் சிறந்த உதைபந்தாட்ட வீரர் ஆகவும் திகழ்ந்த இவர் புகுந்த மண்ணின் கனடாவிலும் தன் முயற்சிகளை நிறைவேற்ற அரும்பாடுபட்டு வருகின்றார் இவரது முயற்சிகளுக்கு எல்லாம் வெற்றி அளிக்குமாற் போல் 50 சிறார்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்புகள் இன்று 250 சிறுவர்களுக்கும் மேலாச வளர்ந்து உள்ளது.

**Rangers** விளையாட்டுக் கழகத்தால் இப்பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படுவதற்கு முன்ட எமது தமிழர் சமூகத்தின் மத்தியில் இது ஒரு நிறைவேற்றப்படாத ஒரு குறையாக பல வருடங்கள் இருந்து வந்துள்ளது. எமது தமிழ் சிறுவர்கள், பல கனேடிய வேற்றுஇனத்தவர்களால் நடாத்தப்படும் கழகங்களில் இணைந்து பணத்தைச் செலுத்தி பயிற்சி பெறவேண்டிய நிலைமையே இருந்து வந்தது. அதுமட்டுமல்லாமல் வேற்றுஇனத்தவர்களால் நடாத்தப்படும் பயிற்சிகளில் எம் சிறார்கள் போதிய அளவு கவனிக்கப்படாமையும் மொழிப் பிரச்சனையும் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டமையும் குறைகளாக இருந்து வந்தன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்குமாற்போல் **Scarborough Rangers** விளையாட்டுக் கழகம் தனது புது முயற்சியை திரு. அன்ரன் சந்திரசேகரா தலைமையில் மேற்கொண்டது.




50 சிறுவர்களுடன் தொடங்கப்பட்ட இப்பயிற்சி வகுப்புகள் இன்று விரிவடைந்து பல வயது பிரிவுகள் ஆக்கப்பட்டு 6 வயதில் இருந்து 14 வயது வரை விரிவடைந்துள்ளது. இன்று 250 சிறுவர்களுக்கு மேல் அங்கத்தவர்களாகச் சேர்ந்து உள்ளார்கள் இத்துடன் கடந்த மாதம் பல தமிழ் இளைஞர்களையும் உதைபந்தாட்டத்தில் அனுபவம் உள்ளவர்ளையும் சேர்த்து உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களையும் புதிதாக இக்கழகம் உருவாக்கியுள்ளது.

சென்ற மாதம் இக்கழகத்தினால் நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கு விருது வழங்கும் வைபவத்தில் 500 இக்கும் மேற்பட்ட பெற்றோர்களும் சிறுவர்களும் கலந்து கொண்டனர். இவ் வைபவத்தின் போது இக்கழகத்தின் செயற்பாடுகளில் மிகவும் போற்றப்படக்கூடியதான உணவு வங்கி (**Food Bank**) நடாத்தப்பட்டு சேமிக்கப்பட்ட பலதர உணவுப்பொருட்களை பெருந்தொகையாக கனடேிய உணவு வங்கி அமைப்பிற்கு வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் கனேடிய பராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கலந்து கொண்டனர். அவர்கள் உரையாடுகையில் தமிழர் சமூகம் பல துறைகளில் முன்னேறி வருகின்றது. இப்போது விளையாட்டு துறையிலும் தொண்டர் சேவை துறையிலும் கணிசமான அளவு பங்கை **Rangers** விளையாட்டுக் கழகம் எடுத்து கொண்டமைக்கும் பாராட்டு வழங்கப்பட்டது.

மேற்படி வைபவத்தில் அனைத்து சிறுவர்களும் வெற்றி கேடயங்களை பெற்றுக் கொண்டமை மிகவும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அனைத்து இளம் வீரர்களும் தங்கள் வயதுப் பிரிவுகளுக்குரிய சீருடையை (**Uniform**) அணிந்து அணி வகுத்து நின்றமை நிச்சயமாக எதிர் காலத்தில் கனேடிய மண்ணில் இவ் இளம் சிறார்கள் பல சாதனைகளைப் படைப்பார்கள் என்பது திண்மாகின்றது.

எமது தமிழர் சமூகத்தின் மத்தியில் கல்விக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஆனால் "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்பது முதுமொழி. எமது வீரர்கள் விளையாட்டு மூலம் உடல் திடகாத்திரத்தை பெற முடியும். உடல் திடகாத்திரத்தை பெறும் போது அவ் இளைஞன் தேக ஆரோக்கியத்தையும் மூளை விருத்தியையும் பெற்றுக் கொள்கின்றான். இதன் மூலம் விளைாட்டுத்துறையில். கல்வித்துறையில் பரிணமிக்க முடியும் என்பது உண்மையாகும். ஆகவே தமிழ் பெற்றோர்கள் கல்வித் துறையில் மட்டும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை மட்டும் நோக்காமல் விளையாட்டுத் துறையிலும் அவர்களின் வருங்காலத்தை வளர்த்தெடுக்கப் பாடுபட வேண்டும்.

இப்படியான முயற்சிகளுக்கு **Scarborough Rangers** ஒரு வழி சமைத்து கொடுத்துள்ளது. இவ் வாய்ப்பை எமது தமிழ் சமூகம் முற்று முழுதாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் **Rangers** விளையாட்டுக் கழகம் **Indoor** (உள்ளக), **Outdoor** வெளியக விளையாட்டு அரங்குகளிலும் தங்கள் பயிற்சி வகுப்புகளை நடாத்தி கொண்டிருக்கின்றார்கள். ஆண்கள், பெண்கள் பிரிவுகளிலும் பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த வருடத்தில் இருந்து திரு. அன்ரன் தலைமையில் நிர்வாகக்குழு அமைக்கப்பட்டு நிர்வாக சபை அங்கத்தவர்களால் இக்கழகம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு **Non-Profit** அமைப்பாக எமது தமிழ் இளம் சமுதாயத்திற்கு பங்காற்றிக் கொண்டு வருகின்றது. இவ் அமைப்பின் சகல நிர்வாக சபை அங்கத்தவர்களும் எமது சமூகத்தின் பாராட்டுக்கு உரியவர்களாவார்.



இக் கழகத்தைப் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர். இணையத்தில் தொடர்பு கொள்ளவும். www.scarboroughrangers.8m.com.


**KAMLA**
NGU-YEN
Sales Representative



**416 - 491-4002**

**RE/MAX Crossroads Realty Inc.**


**THINKING OF SELLING ....**

"HOW Much Is Your Property Worth"?
Knowing the value of your property in today's market can help you make important financial decisions for you and your family .
For a complimentary market evaluation of your property - Call me today!

**BUNGALOW:** Prime Location! 3+2 bedroom, 2 kitchens, 2 new baths, thermal windows, hardwood floors, 8 appliances. Walk-out bsmt, attached garage, Lots of upgrades, Must be sold.

**CONDOMINIUM:** Central Scarborough 2 + 1 bedroom, 2 baths, large balcony, sunny exposure 4 n-e-w-e-r appliances, parking. Lo g or Short closing possible.

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
**ரவி நடராஜா**



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள

**Accident & Traffic Ticket**
(13 Years Insurance Claims Experience)

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., On

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம்

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

**1985**

1. அவன்
2. அலைஓசை
3. அன்னை பூமி
4. அண்ணி
5. அந்தஸ்து
6. அமுதகானம்
7. அன்பின் முகவரி
8. அந்த ஒரு நிமிடம்
9. அவள் சுமங்கலி தான்
10. அர்த்தமுள்ள ஆசைகள்
11. அடுத்தாத்து ஆல்பர்ட்
12. அம்மாவும் நீயே அப்பாவும் நீயே
13. ஆண்பாவம்
14. ஆஷா
15. ஆகாயதாமரைகள்
16. ஆண்டவன் சொத்து
17. [illegible]ண்டு மனம்
18. இதயக்கோயில்
19. [illegible]ளமை
20. இளங்கன்று
21. இது எங்கள் ராஜ்யம்
22. இணைந்தகோடுகள்
23. ஈட்டி
24. உரிமை
25. உத்தமி
26. உதயகீதம்
27. உனக்காக ஒரு ரோஜா
28. உன்னைத்தேடி வருவேன்
29. உன்னை விடமாட்டேன்
30. உன்கண்ணில் நீர் வழிந்தால்
31. உயர்ந்த உள்ளம்
32. ஊடஞ்சலாடும் உறவுகள்
33. எரிமலை
34. எங்கள் குரல்
35. ஏமாற்றாதே ஏமாறாதே
36. ஒரு கைதியின் டயரி
37. ஒரு மலரின் பயணம்
38. கடிவாளம்
39. கன்னிராசி
40. கற்பூரதீபம்
41. கருப்பு சட்டைக்காரன்
42. கல்யாணம் ஒரு கால்கட்டு
43. கல்யாண அகதிகள்
44. கரையை தொடாதஅலைகள்
45. காவல்
46. காக்கிச்சட்டை
47. கீதாஞ்சலி
48. குற்றவாளிகள்
49. குங்குமசிமிழ்
50. கெட்டிமேளம்
51. கொலுசு
52. சந்தோசக்கனவுகள்
53. சமுதாய சந்தையிலே
54. சமயபுரத்தாளே சாட்சி
55. சாவி
56. [illegible]ப்புக்கிளி
57. சிந்துபைரவி
58. [illegible]ணவீடு
59. சித்திரமே சித்திரமே

நீதியின் நிழல்



1985 இல் சிவாஜியின் படங்கள் எட்டு ஆகும். பந்தம், நாம் இருவர், படிக்காதபண்ணையார், நீதியின் நிழல், நேர்மை, முதல்மரியாதை, ராஜரிஷி, படிக்காதவன்.

'நீதியின் நிழல்' படம் ஒரு சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பு ஆகும்.



# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு **'வேலவன் பிலிம்ஸ்'** ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு **(Ticket)** வழங்கப்படும்.

***சினிமா போட்டி # 8***

**1. ஜோடி படத்தின் கதாநாயகன், கதாநாயகி யார்?**
**2. 'வம்ச விளக்கு' படத்தின் கதாநாயகன், கதாநாயகி யார்?**
**3. விஜய்-சூர்யா இணைந்து நடித்த படங்கள் எவை?**



***சினிமாப் போட்டி #7 இன் விடைகள்***

1. ரமண கோகுலா 2. பூவிலங்கு 3. கடல்பூக்கள்

**போட்டி #7இல் வெற்றி பெற்றவர்கள்** 1) பகீரதன், Donmills

விடைகளை June 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.


தமிழர் நிர்வாகத்தில்



ஒரு


EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால

வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

5 SAMOSA $1.00



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)
5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-332-8451

# ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



## பெற்றோர் பிள்ளைகளுக்குப் பாரமா?!

### சீதனம்

சென்ற இதழில் சீதனம் கொடுக்கும் வழமை முறை எமது சமூகத்தினரிடையே, பெற்றோர்களே பிள்ளைகளுக்கு பாரமாக வரக்கூடிய வகையில் நிலைமைகளை உருவாக்கியது என்று சொல்லி இருந்தேன். அது எவ்வாறு என இந்த இதழில் பார்ப்போம். எமது சமூகத்தினரிடையே பெரும்பான்மையான சைவ சமயத்தை சார்ந்தவர்களின் திருமணங்களின் போது சொல்லப்படும் மந்திரங்கள் உண்மையில் திருமணங்களை நடத்தி வைத்ததோ இல்லையோ, சீதனம் என்ற மந்திரச் சொல் நிச்சயமாக திருமணங்களை செய்து வைத்தது என்றே சொல்லலாம். சில சமயங்களில் நீ இன்றி நான் இல்லை, வாழ்வு இல்லை என்று இருந்த காதல் கூட நிறைவேற சீதனம் என்ற மந்திரச் சொல்லின் மகிமை தேவைப்பட்டது. சீதனம் என்ற மந்திரச் சொல்லுக்கு பல்வேறு கருத்துக்கள் இருந்தன. பணம், வீடு, நகை, நிலம் என்று பல்வேறு விடயங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக் கொண்டிருந்த சீதனத்துடன் இறுதிக் காலங்களில் Donation என்ற சொல்லும் இணைந்து கொண்டது. Donation என்பது நல்ல ஆண் மகனைத் தமது குடும்பத்திற்கு மணமகனாக ஆக்கும் விதத்தில் வளர்த்து எடுத்த பெற்றோர்களுக்கு, பெண்பிள்ளைகளை பெற்றெடுத்த பெற்றோர்கள் செய்து கொடுக்கும் மரியாதை ஆகும்.



எமது சமூகத்தினரிடையே இருந்த பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை திருமணம் செய்து வைக்க மேற்ச் சொன்ன சீதன சீர்வரிசைக்கு தம்மை தயார்ப்படுத்த வேண்டி இருந்தது. தாம் பெற்றெடுத்த பிள்ளைகளின் எதிர் காலத்திற்காக தமது வாழ்க்கைக் காலத்தையே முழுமையாக செலவிட்டனர். மாத வருமானம் பெற்று வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்த பெரும்பான்மையான நடுத்தர வர்க்க குடும்பத்தினர் இந்த வழமை முறையினால் பெருதும் பாதிக்கப்பட்டனர். தமது குடும்பத் தரத்தை உயர்த்துவதற்கு மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்தனர். பல பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களில், முதலாவதாக ஆண்பிள்ளையை பல்கலைக்கழகம் வரை அனுப்புவர். அவரை ஒரு பொறியியலாளனோ, வைத்தியனோ ஆகவர வைத்தால் தான் ஆண்பிள்ளையின் மதிப்பும் உயர்ந்து சமூகத்தில் கௌரவம் அதிகரித்து இறுதியில் பணம் படைத்தவர்களின் கருணையால் சீதனம், Donation என்ற பெயரில் குடும்பத்திற்கு சன்மானமாகக் கிடைக்கும்.. அதைப் பார்த்து ஒவ்வொரு குடும்பமும் இயன்ற வரை ஒரு வித போட்டி மனப்பான்மையில் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டியாவது பிளளைகளுக்கு தனியாகப் பாடம் புகட்டி பலகலைக்கழகம் அனுப்பப் பாடுபட்டனர். பல்கலைக்கழகம் செல்ல கிடைக்காதவர்கள் இங்கிலாந்து பயணமாகி குடும்ப தரத்தை உயர வைத்தனர். ஆண் பிள்ளைகளுக்கு இப்படி செலவு செய்ய வேண்டி இருந்தால், பெண் பிள்ளைகளுக்கு சொல்லத் தேவையில்லை. மாத வருமானத்தில் மிச்சம் பிடித்து சீட்டு பிடித்து, வங்கியில் கடன் எடுத்து காணி வாங்கி, வீடுகட்டி, நகை செய்து, காசு சேர்த்து என்று பல காரியங்கள் செய்ய வேண்டி இருந்தது.

மேற்சொன்ன காரியங்களை செய்ய பெற்றோர்களுக்கு முழு வாழ்க்கைக் காலமும் பிடித்தது. தமது பிள்ளைகளின் எதிர் காலம் பற்றி சிந்தித்த பெற்றோர் தமது எதிர்காலம் பற்றி சரியாக சிந்திக்காமல் உழைத்த எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கு கொடுத்து இறுதியில் பிள்ளைகளின் கைகளை எதிர் பார்க்க நேரிட்டது. இப்படி தமது குடும் பொறுப்பை சரியாக செய்த பெற்றோர்கள் நிலைமை உருவாக ஒரு சில பொறுப்பற்ற பெற்றோர்களின் நிலைமை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. பல பிள்ளைகளை சில பெற்றோர்கள் சிறுதும் சிந்திக்காமல் பெற்றெடுத்தனர். ஏதோ ஒரு வகையில் வளர்ந்த மூத்த பிள்ளைகளின் தலைகளில் பின்னுக்கு பிறந்த பிள்ளைகளின் பொறுப்பை கட்டிவிட்டனர். பிள்ளைகளுக்கு தாய் தந்தை மேல் இருக்கும் பாசத்தை பிழையாக பாவித்து வாழத் தலைப்பட்டனர். குடும்ப வறுமையின் நிலைலயினால் படிப்பை இடையில் நிறுத்தி பல வேறு விதமான வேலைகள் செய்து நாளடைவில் வேற்று நாட்டு கப்பல்களிலும், வேறு நாடுகளுக்கும் சென்று உழைத்த பணத்தை, உரிமையுடன் செலவழித்தும் பொறுப்பற்ற தனமாக நடந்தும் சில பெற்றோர்கள் தாம் பெற்ற பிளளைகளில் தங்கி பாரமாக இருக்க வழி வகுத்தனர். இவ்வாறு ஏதோ ஒரு வகையில் எமது சமூகத்தினரிடையே இருந்த பெற்றோர்கள், பிளளைகளில் தங்கி அவர்களுக்கு பாரமாக வாழும் நிலைமை உருவாயிற்று. தாய், பிள்ளை ஆனாலும் "வாயும், வயிறும் வேறு" என்பதை முற்றாகவே மறந்து போயினர். நாட்டு நிலைமை மோசமாகி எமது இனத்தின் தலை விதி மாறத் தொடங்கியதும் பிள்ளைகளின் கைகளை எதிர் பார்த்து வாழும் பெற்றோர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாகி நிலைமை மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

நாடு விட்டு நாடு வந்த பெற்றோர்களின் நிலைமைகளையும் பெற்றோர், பிள்ளைகளின் உறவு முறைகளையும் அவற்றை சீர் செய்யும் வழி முறைகளையும் அடுத்த இதழில் பார்ப்போம்.



*சிந்தனை தொடரும்....*

பரம் **G.**
ஒரு சாதாரண மனிதன்

## இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் தரும் அறிவித்தல்

இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தினால் தொடர்ந்து நடாத்தப்படும் சமூகசேவைத் திட்டங்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது அடுத்த சேவைத் திட்டமாக மக்களுக்கு வைத்தியசேவை வழங்கும் Centenary வைத்தியசாலைக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு எங்களாலான பண உதவியை வழங்கும் பொருட்டு ஒரு (Fund Rasing Event) நிதி சேகரிக்கும் திட்டம் செய்ய எண்ணியிருக்கின்றோம். அத்துடன் இலங்கையின் வட, கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களிற்காக புத்தகங்கள் சேகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த நிகழ்ச்சி எதிர்வரும் July 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9:00 மணிமுதல் மாலை 4:00 மணிவரை Centenary வைத்தியசாலையின் முன்னால் உள்ள Dominion Mall இல் உள்ள கார் தரிப்பிடத்தில் அதாவது 2900 Ellesmere வீதியில் (Neilson / Ellesmere -North East) சந்திக்கும் இடத்தில் நடைபெற உள்ளது.

அன்று நாம் செய்யத் திட்டமிட்டுள்ளவை

1. தொண்டர்களினால் **கார் கழுவுதல்**
2. Hotdog Barbecqe செய்து **விற்பனை செய்தல்**
3. நல்ல நிலையில் உள்ள பாவித்த உபகரணங்கள் **விற்பனை செய்தல்**
4. இலங்கைப் பல்கலைக்கழகங்களிகான **புத்தகங்கள் சேகரித்தல்**



உங்களது நல்லாதரவை இந்த நிகழ்ச்சிக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம். எங்கள் சேவைத் திட்டங்கள் வெற்றி பெற உங்களது காரை அந்த இடத்திற்கு கொண்டு வந்து கழுவுதல், உங்களால் பாவித்து இனிப் பாவிக்கத் தேவையில்லை என்ற நிலையில் உள்ள பொருட்களை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்து தருதல் போன்றவையும் இலங்கையில் வட, கிழக்கில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களிற்கு தேவையான புத்தகங்கள் கொடுத்து உதவுதல், மற்ற நிகழ்சிகளிலும் பங்குபற்றி எங்கள் திட்டத்தை வெற்றிபெறச் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம். ஒரு மரம் தோப்பாகாது. உங்களின் உதவி எங்கள் சமூகத்திற்கான வெற்றி.

மேலதிக விபரங்களுக்கு
(416) 438-2949
(416) 293-4697
(416) 299-3652
(416) 315-9397



THE SCARBOROUGH HOSPITAL
**The Scarborough Hospital**
**Grace & General Division**

ஸ்காபரோ வைத்தியசாலைக்கு நிதிசேகரிக்கும் முகமாக

கனடா-இலங்கை தமிழர் வர்த்தக சம்மேளனம் வழங்கும்

Canada Ceylon Tamils' Chamber of Commerce Presents

மூன்றாவது வருடாந்த
Third Annual

**தமிழர் நடைபவனி**
**WALK-A-THON 2001**

**ஜூன் 17, 2001 ஞாயிற்றுக்கிழமை**
காலை 8:00 முதல் 11:30 வரை

SUNDAY
JUNE 17, 2001
8:00 am– 11:30 am

இடம்: Kids Town Water Park
3159 Birchmount Road at McNicoll, Scarborough

*Prizes for the highest fund raisers:*
- 1st – Return air ticket to U.K
- 2nd – 20" Colour TV
- 3rd – DVD Player

and more consolation prizes

அதிக நிதி சேகரிப்போர்களுக்கான பரிசுகள்:
- முதலாவது: இங்கிலாந்து சென்றுவர விமானச் சீட்டு
- இரண்டாவது: 20" வர்ண ரீ.வி.
- மூன்றாவது: DVD Player


மேலும் பல ஆறுதல் பரிசுகள் ...............

ஆதரவு வழங்குவோர்

மேலதிக விபரங்களுக்கு: சம்மேளனம்: (416) 335-9791
மோகன்: (416) 751-2791 விக்டர்: (416) 290-1200

## அந்நியர்கள்:-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி



நமது பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் வெறுமையாக இருந்து பின் அவ்வெளியில் இருந்து பல கலக்சிகள், கோள்கள், நட்சத்திரங்கள் தோன்றுவதும் அழிவதும் பின்னர் தோன்றுவதுமாக தொடர்ந்து நடைபெறுகிறது எனக் கூறியிருந்தேன். ஒவ்வொன்றும் பல பில்லியன் வருடங்களுக்கு பிரபஞ்சத்தில் காணப்பட்டு இருக்கும். ஆக முன்னர் பல நட்சத்திரக் கூட்டங்கள், கோள்கள் என்பன இருந்தன. இன்றும் வேறு பல இருக்கின்றன. இனி வரும் பல பில்லியன் வருடங்களுக்குப் பின்னரும் பல நட்சத்திரங்கள், கோள்கள் இருக்கப் போகின்றன. (அக்காலத்தில் எமது சூரியக் குடும்பம் இல்லாமல் போய்விடும்) வேதியல் மாற்றங்களின் ஊடாகவும், பரிணாம வளர்ச்சியாலும் உயிரினங்கள் தோன்றி இருக்குமாயின் என்றோ அழிந்துவிட்ட அல்லது இன்று அழிந்து கொண்டிருக்கும் அல்லது இன்று உயிர்ப்புடன் இருக்கும் சில நட்சத்திரங்களை வலம் வ[illegible] அல்லது வலம் வரும் கோள்களில் உயிரினங்கள் தோன்றுவதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு. அப்படி உயிரினம் தோன்றி இருந்தால் இன்று பூமியில் இருக்கும் நாம் அண்டவெளியை ஆய்வு செய்யத் தொடங்கியது போல் அவர்களும் விண்வெளியை ஆராய முற்பட்டிருப்பார்கள். அம்முயற்சியின் பயனாக அவர்களது விண்கலங்கள் அதிஉயர் தொழில் நுட்பங்களுடன் விண்வெளியில் பயணித்து இருக்கும். அவ்விதம் விண்வெளியில் சஞ்சரித்த உயிரினங்களின் கண்களில் எமது பூமி தென்பட்டிருக்கும். எனவே அவர்கள் எமது பூமியை ஆராயத் தொடங்கியிருப்பார்கள். இவ்விதம் எமது பூமியை ஆய்வு செய்பவர்கள் எமது கண்களில் தென்பட, எம்மைக் கண்டு கொண்ட அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக ஓடி ஒழிய - UFO, ALIEN அந்நியர்களாக எமக்கு சந்கேம் தோன்றுகிறது.

சரி, இது இன்று நம்மைச் சந்திக்க அல்லது ஆராய்ச்சி செய்யவருகின்ற வெளி உலக வாசிகளைப் பற்றிய எமது கருத்து அல்லது சந்தேகம் எனலாம். இதே நிகழ்வு சுமார் 2000 அல்லது அதற்கு முந்திய காலங்களில் நடைபெற்றிருந்தால்.... எம் முன்னவர்களது நிலைப்பாடு எப்படி இருந்திருக்கும்? விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு இல்லாத அல்லது மிகக் குறைந்த அளவிலான அறிவினை உடைய (இன்றைய நிலையுடன் ஒப்பிடுகையில்) எமது முன்னவர்கள் வெளிக்கிரக வாசிகளை சந்தித்திருந்தால் அல்லது காண நேர்ந்திருந்தால் அந்த அந்நியர்களைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள் என நினைக்கின்றீர்கள்.



அவர்களது ஆற்றல்கள் நம்மவர்களைப் பிரமிக்க வைத்திருக்கும். அவர்களது கருவிகள் எம்மவர்களைப் பயமுறுத்தி இருக்கும். அவர்கள் வந்திறங்கிய விண்கலங்களைப் பார்த்து திகைத் திருப்பார்கள் அல்லது வியந்திருப்பார்கள். அவர்களது உயர் விஞ்ஞான அறிவின் வெளிப்பாடுகளை எல்லாம் செயற்கரிய காரியங்கள் எனப் போற்றி இருப்பார்கள். இயல்பாகவே அவர்களிடம் ஒரு பயம் ஏற்பட்டு அது மரியாதையாகி இறுதியில் அவர்களிடம் ஒருவித ஈர்ப்புக்குள்ளாகிவிடுவார்கள். அந்த அந்நியர்கள் கூட தமது கருவிகளின் உதவியுடன் (எமது Computer கள் போன்று) நம்மவர்களது பாசையை இலகுவில் அறிந்து இவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்து இருப்பார்கள் அல்லது தொடர்பு கொண்டிருப்பார்கள். ஏன் சிலவேளைகளில் இந்த ஏலியன்கள் அறிவியல் நிலையில் மிக கீழாக இருந்த நம் முன்னவர்களுக்கு அவர்களது வாழ்க்கை ஒழுங்குபடுத்த உதவி கூட செய்திருப்பார்கள்.

இன்று இது போன்ற நிகழ்வு பூமியின் ஓரிடத்தில் நடைபெறுமாயின் எமக்கு ஏலியன்கள் பற்றி சந்தேகம் அடியோடு தீர்ந்து போயிருக்கும். ஏனெனில் விமானங்கள், விண்கலங்கள், பாரதூரமான ஆயுதங்கள் எல்லாம் கூட ஓரளவில் எம்மிடம் உண்டு. ஆனால் வெறும் இரும்பு ஆயுதங்களையோ அல்லது அது கூடவே இல்லாத எம் முன்னவர்கள் மத்தியில் இந்த ஏலியன்கள் வந்து தமது விஞ்ஞான விற்பன்னத் தனத்தை காட்டினால் அவர்கள் இந்த ஏலியன்கள் பற்றி என்ன நினைத்திருப்பர்கள்? நீங்கள் நினைப்பது சரிதான். ஆம் இவர்களை இந்த ஏலியன்களை நம்மவர்கள் கடவுள்கள், தேவபுருசர்கள் என்று தான் எண்ணியிருப்பர்கள், சேவித்திருப்பார்கள் நன்மை செய்தவர்களைக் கடவுள்கள் என்றும் தீமை செய்தவர்களை பிசாசுகள், சாத்தான்கள் என்றும் கூறி இருப்பார்கள்.

இப்படியாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவர்களின் கருத்துப்படி பழைய மக்களின் கடவுள்கள் எல்லாம் இந்த விண்வெளியில் இருந்து வந்த அந்நியர்கள், ஏலியன்கள் தான் என் கிறார்கள். அல்லாமலும் பழைய சிறப்பான நா[illegible]ரிகங்களுக்கெல்லாம் காரண கர்த்தாக்கள் கூட இந்த ஏலியன்கள் [illegible] என்பது இவர்களது வாதம். இதற்கான பல தடயங்களைப் பூமியின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம் எனவும் இவர்கள் கூறுகின்றார்கள் இவர்கள் கூறும் ”ஏலியன் அடையாளங்களை இனிப் பார்ப்போம்.”


**VIMAC HOME RENOVATIONS**

**SPECIALIZING IN INSTALLATION OF**

* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS

**FREE ESTIMATE**

& GENERAL HOME RENOVATION

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES





Kiruba Kirushan
*Service with a Broad Smile*

**EASY HOME BUY**

வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.

Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!

With a small down payment, you could own your dream home.

FOR ALL YOUR HOUSING NEEDS CALL

**416-414-5562**





**invis** Financial Group

As an Invis Mortgage consultant I take all your headache and of mortgage shopping for you

இன்பத் தமிழில் உரையாடி உங்கள் அனைத்து Mortgage தேவைகளையும் பெற்றிட அழையுங்கள்

* 5% முற்பணத்துடன் வீடு வாங்குவதற்கு
* Below bank rates
* 1st and 2nd mortgages

**kokila varathes**

@ 416-569-2141

vkokila@home.com



**புதிய காட்சியறையில்**




**SABONA**
*& GIFT*

(416) 264-8787 (416) 269-8151

2602 B Eglinton Ave. East, Scarborough

www.tamilclub.com/sabona sabona@home.com

# Neelam Silk

# கோலாகலத் திறப்பு விழா


ஸ்காபுரோ மக்களுக்கு நீலம் சில்க்கின் மற்றுமோர் பட்டு ஆலயம் எதிர்வரும் ஆனி மாதம் 2ம் திகதி 02-06-2001, 2378 **Eglinton Ave** இல் அமைந்துள்ள எமது புதிய கிளை ஸ்தாபனத்தின் காட்சி அறையை ஆரம்பிக்கவுள்ளோம். அத்தருணம் எமது நண்பர்கள், அன்பர்கள், உற்றார் உறவினர்கள், வாடிக்கையர்கள், அனைவரும் தங்கள் குடும்பத்துடன் வந்து இவ் விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**புதிய கிளை ஆரம்ப விழாவை முன்னிட்டுப் புதுப் பட்டுத் தெரிவுகளையும் இங்கு அறிமுகம் செய்கின்றோம்**



**Japan Crystal Silk,**
**Sonalika Pure Silk,**
**Jardhoshi Satin &**
**Crepe Silk,**
**Jaipur Crystal Silk,**
**Vasunthara Network Crepe**

இப்படி பலவகை புதிய தெரிவுகள்



## உங்கள் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து ஆடைத் தெரிவுகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய ஸ்காபுரோ நகரில் ஒரு பட்டு ஆலயம் நீலம் சில்க்

**2378 EGLINTON AV. E.**

(Kennedy Rd. & Eglinton Ave. Scarborough)

**Tel: 416-778-7455 / 416-759-2002**

# 7TH ANNIVERSARY SPECIAL

# Safety Truck

## Training School Ltd.

## A Z License FULL COURSE

**Limited Time Special**

**June 01, 2001 to June 30, 2001 ONLY**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம்
(7ம் ஆண்டு) வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**

## In Classes

- Medical Exam
- Exam Fee
- Air Brake Endosement
- Dangerous Goods
- P. D. I. C.
- Border Crossing
- Log Books
- Road Test

PRICE INCLUDED

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

## YOGAN SOCKALINGAM

**Truck Driving போதனாசிரியர்**

